**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22.03.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தேசிய இளைஞர்கள் மாநாடு ; "உணவுபாதுகாப்பு முதல் ஊட்டச்சத்து பாதுகாப்பு வரை: இளைஞர்களின் பார்வை"**

தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), அகில இந்திய வேளாண் மாணவர்கள் சங்கம் (AIASA) மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகம் (ICAR), இணைந்து நடத்தும் தேசிய இளைஞர்கள் மாநாடு,"உணவு பாதுகாப்பு முதல் ஊட்டச்சத்து பாதுகாப்பு வரை: இளைஞர்களின் பார்வை (FSNS 2022)"என்ற தலைப்பில் இன்று (24.03.2022) துவங்கியது.

முனைவர். அ.சு. கிருட்டிணமூர்த்தி, செயல் துணைவேந்தர் மற்றும் பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் தனது தொடக்க உரையில் திருக்குறளை மேற்கோள்காட்டி வேளாண்மையின் முக்கியத்துவம் மற்றும் தொழில் முனைவர்களுக்கான சாத்தியக் கூறுகளை வலியுறுத்தினார். மேலும், 2050 ஆண்டில் உலக மக்கள் தொகையானது 9 பில்லியன் ஆக உயரலாம் என்றும் அதில் 14 சதவிகிதம் இளைஞர்கள் (வயது 15 – 24) என்றும் விவரித்தார். மேலும், மின்னனு விவசாயம், தொலையுணர்வு அறிவியல் மற்றும் நானோ அறிவியல் ஆகிய துறைகளில் இளைஞர்கள் தொழில்முனைவோர்களாக முன்னேற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

முனைவர். இராம. கதிரேசன், துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அவர்கள் குறிப்புரையில் 15 வயது முதல் 49 வயது வரையில் உள்ள பெண்களில் 51 சதவிகிதம் ஊட்டச்சத்து பாதுகாப்பின்மையால், இரத்தசோகை ஏற்பட்டுள்ளது என்று வலியுறுத்தினார். இதனை தொடர்ந்து இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்களும், அனுபவம் வாய்ந்த விஞ்ஞானிகளும் இணைந்து

பல்வகை மற்றும் கூட்டு ஆராய்ச்சி மூலம் வேளாண் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு ஊட்டச்சத்து பாதுகாப்பினை வலுபடுத்த வேண்டும் என வேண்டுகோள் வைத்தார்.

முனைவர். ஆர்.சி. அகர்வால். கல்வித்துறை துணைத் தலைவர். இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகம், புது தில்லி அவர்கள் தனது சிறப்புரையில் 1 கிலோ உணவு நெல் உருவாக்க 3000 லிட்டர் தண்ணீரும், 1 கிலோ காபி தயாரிக்க 900 லிட்டர் தண்ணீரும் தேவைப்படுவதால் உணவு வீணடிக்கப்படுவதை குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

திரு. விவேக் சவுரப், தேசிய செயலாளர், அகில இந்திய மாணவர்கள் சங்கம் அவர்கள் இம்மாநாட்டின் முக்கியத்துவத்தை விளக்கினார். முனைவர். ம. கல்யாணசுந்தரம், முதல்வர் (வேளாண்மை), தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர் தமது உரையில் இந்திய நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவாகவும், ஊட்டச்சத்து பாதுகாப்பில் தன்னிறைவற்றும் உள்ளது என்று குறிப்பிட்டார். மேலும், அவர் இந்திய நாடு 14.5 சதவிகிதம் பசியால் (உணவு பற்றாக்குறை) பாதிக்கப்பட்டு வருவதாகவும், அதனை நிவர்த்தி செய்ய மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து முறையான “உயிர் வலுவூட்டல்” ஊட்டச்சத்து பற்றாக்குறைவினை நீக்க சிறந்த வழியாகும் எனவும் குறிப்பிட்டார்.

முன்னதாக முனைவர். தி. ரகுசந்தர், தேசிய அமைப்பு செயலாளர் மற்றும் முதல்வர் (மாணவர்கள் நலன்), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இறுதியாக திரு. க. கார்த்திகேயன் மாநில அமைப்பு செயலாளர் அவர்கள் நன்றி உரை வழங்கினார்.

இக்கருத்தரங்கின் ஒரு பகுதியாக புத்தக கண்காட்சி மற்றும் அறிவியல் கண்காட்சிகள் முன்னாள் மாணவர்கள், கிராமப்புற இளைஞர்கள் மற்றும் தொழில்முனைவோர்களின் வழிகாட்டுதலின் வழியே மாணவர்களுக்கு உதவியாக இருக்க ஏற்ப்பாடு செய்யப்பட்டது. மேலும், இம்மாநாட்டில் 850 பங்கேற்ப்பாளர்கள் இணையம் மற்றும் நேரடியாகவும் கலந்துகொண்டனர். இதில், 474 மாணவர்கள் தங்களின் ஆய்வுச் சுருக்கத்தினை சமர்பித்துள்ளனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்